1979 பிப்ரவரி 28]

தருமபுரி மாவட்டத்தில் பாசன வசதிகள்,

*வினா எண் 154—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தருமபுரி மாவட்டத்திலுள்ள ஒகேனக்கல் ஆற்றிலிருந்து பம்பிங் ஸ்டேஷன் மூலம் நீர் எடுத்து 'பாசன' வசதிகளை உருவாக்க அரசு ஏதேனும் செயல் திட்டம் வகுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இல்லை,

டாக்டர் கே, சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்யாணம் பண்ணியும் பிரம்மசாரி, கூடன் பட்டும் வெறும் பட்டினி என்பதோடு காவிரி பாய்ந்தும் பஞ்சப் பகுதி தர்மபுரி மாவட்டம் எனும் நிலையிலுள்ளது, கர்நாடகத்தில் பிறந்து தர்மபுரி மாவட்டத்தில் துள்ளிக் குதித்து, மேட்டூரில் தவழ்ந்து விளையாடி, தஞ்சையை வாழ வைத்து கடலில் சங்கமம் ஆகிறது காவிரி, இப்படிப்பட்ட காவிரி பாய்கின்ற தர்மபுரி மாவட்டத்தில் வறட்சி நீங்கி வளர்ச்சி பெறப் பொன்னகர பகுதியை மெருகூட்ட. பம்பிங் ஸ்டேஷன் அமைத்து இந்த நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரியாக இருக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படித்தான் இருப்பேன் என்று சொன்னால் அதற்கு ஆட்சேபணை இல்லை, (சிரிப்பு) மேலும் ரிவர் பம்பிங் ஸ்டேஷன் அமைத்து. அதன் மூலம் தண்ணீரை எடுத்து .பாசனத்திற்குப் பயன்படுத்துகின்ற திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

ஆனால் அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில் 'ரிவர் பம்பிங் ஸ்கீம்' ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு. அதன் மூலமாக தென் பெண்ணையாற்றில் நீரை எடுத்து, 281 ஏக்கர் குண்டல்பட்டி கிராமத்திற்குப் பக்கத்தில் பாய்ச்சப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் இப்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தென்பெண்ணையாற்றில். குண்டலப்பட்டி கிராமத்தில் பம்பிங் ஸ்டேஷன் மூலம் ஒரு திட்டம் நிறைவேற்றப்படுவதாகச் சொல்லுகிறார்கள், இன்னும் அந்த திட்டம் ஆரம்பிக்கப்படவில்லை. எனவே, விரைவில் ஆரம்பிக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, குண்டலம்பட்டி திட்டம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது என்று சொன்னேன். ஆரம்பிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால், அது உடனடியாக பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது, காவேரி ஆற்றிலிருந்து தண்ணீர் பம்ப் மூலமாக கிடைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொன்னார்கள், ஆனால். தர்மபுரி மாவட்டத்தில் சிறுபாசன திட்டத்தின் கீழ் நிறைய திட்டங்கள் பரிசீலனையில் இருக்கின்றன, அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் வறட்சி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பாசன வசதிகளை அதிகரிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு, கசிவு நீர் தடுப்பு அணைகள் கட்டப்பட்டு வருகின்றன, அதன் மூலம் இன்று ஓரளவு பாசன வசதியை அதிகரித்து வருகிறோம். மேலும் அந்தத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, ஒகேனகல் பம்பிங் ஸ்கீம் திட்டம் பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள், இந்த வறட்சி பகுதிகளுக்கு நீர் வருவதற்கு இது ஒரு சிறந்த திட்டம் என்ற காரணத்தால், இனிமேலாவது அதைப்பற்றி பரிசீலனை செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒகேனகல் திட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே மின்சார உற்பத்திக்கான முறையிலே கர்நாடக மாநிலமும், தமிழக மாநிலமும் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டு வருகின்றது, ஆகவே, அங்கே பாசன வசதியைப் பொறுத்த அளவிலே திட்டம் இன்னும் பரிசீலனையில் இல்லை.

கைலாபுரம் மருத்துவமனை.

*வினா எண் 155— திரு. மொ. பரமசிவம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா

வானூர் ஒன்றியத்தில் உள்ள தைலாபுரம் மருத்துவ மனையில் போதுமான பணியாட்களை அமர்த்தவும் மருந்து வகைகள் வழங்கவும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?